# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

புதன்கிழமை 11.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


## சஜித்திற்கு ஆதரவு உறுதி

# தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தேவையில்லை

ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக இலங்கைத் தமிழரசுக்கட்சி அறிவித்திருக்கும் நிலையில், செவ்வாய்க்கிழமை (10) வவுனியாவில் கூடிய ஜனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்கான கட்சியின் விசேட குழு, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கோரி எதிர்வரும் 14 அல்லது 15 ஆம் திகதி அறிக்கையொன்றை வெளியிடுவதற்கும், எதிர்வரும் 14 ஆம் திகதி கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை நடத்தாமல் இருப்பதற்கும் தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# விஞ்ஞாபனங்களை அலசி ஆராய்ந்து முடிவை அறிவிப்போம்

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானம் முறையாக மேற்கொள்ளப்படாத பின்னணியில், தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்கான விசேட குழு சகல வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களையும் மீண்டும் நன்கு ஆராய்ந்து, யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து எதிர்வரும் 14 அல்லது 15 ஆம் திகதி உரியவாறான அறிக்கையொன்றை



02 ஆம் பக்கத்தில்...

# பொருத்தமான அறிக்கையை வெளியிடுவோம்

நாங்கள் இறுதி முடிவை எப்போது எடுப்போம் என்பது தான் முக்கியமானது. ஆகவே கட்சி எடுத்த தீர்மானத்திலும் இன்று நாங்கள் என்ன திருத்தங்களை மாற்றங்களை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் பேசியிருக்கிறோம். அதற்கு பொருத்தமான ஒரு அறிக்கை நாங்கள் வெளியிடுவோம் என தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட குழு கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



## தமிழ் பொது வேட்பாளர்

# வடக்கு, கிழக்கு மக்கள் நினைப்பது என்ன?



2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தல் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி வடக்கு, கிழக்கில் கருத்துக்கணிப்பொன்று நடத்தப்பட்டது.

இதில் தமிழ் பொதுவேட்பாளரை இத் தேர்தலில் களமிறக்கியது தொடர்பிலும் அவர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். ஈழத் தமிழர்களை தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏமாற்றி வருவதாக இங்குள்ள மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். பொது வேட்பாளர் திடீரென்று தேர்தலில் களமிறங்கவில்லை. சுமார் ஆறு மாதங்களுக்கும் மேலாக தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களும் இணைந்து பொது வேட்பாளரை களமிறக்கலாமா? அதற்கான சாதகபாதகங்கள் ஆகியவை பற்றிய நீண்ட விவாதத்துக்குப் பின்னரே பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். எங்களுக்கு விருப்பமோ இல்லையோ ஏதோ

02 ஆம் பக்கத்தில்...

# சஜித்துடன் கலந்துரையாடி அறிவிப்பேன்



சஜித் பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான காலவரையறைகள் தொடர்பில் அவருடன் நான் கலந்துரையாடி விசேட குழுவிற்கு அறிவிப்பேன். எனவே மத்திய செயற்குழு கூட்டமும் இரத்து செய்யப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட குழு கூட்டம் தொடர்பில் அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோதே


02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கு அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவியைப் பெறுவது றவூப் ஹக்கீமுக்குப் பிடிக்காது

## ஆளுநர் நஸீர் அஹமட் ஆதங்கம்

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் எவரும் அமைச்சுப் பதவியைப் பெறுவது றவூப் ஹக்கீமுக்குப் பிடிக்காது - வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் ஆதங்கம்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீமுக்குள்ள கவலை இந்த சமூகத்தைப் பற்றியதோ நாட்டுமக்களைப் பற்றியதோ அல்ல. அவருக்குள்ள பிரச்சினை கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள் எவருமே அமைச்சுப் பதவிகளைப் பெறக்கூடாது என்பதேயாகும் என வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் விசனம் வெளியிட்டார்.

எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் றவூப் ஹக்கீம் நிற்கும் அணி படுதோல்வி அடையும் எனவும் அவர் கூறினார்.

இடம்பெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹவை ஆதரித்து ஏறாவூரில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அங்கு அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷர்ரப் , உட்பட இன்னும் பல அரசியல் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், உற்பத்திறன் அமைச்சராக பஸீர் சேகுதாவூத் அமைச்சைப் பாரமெடுத்தபோது அதனைப் பொறுத்துக் கொள்ளாத றவூப் ஹக்கீம் பஷீர் சேகுதாவூதை கட்சியிலிருந்து நீக்கி விட்டார். நான் சுற்றாடல் துறை அமைச்சராகப் பதவியேற்றபோது என்னையும் கட்சியிலிருந்து நீக்கி விட்டார். சமீபத்தில் அலிஸாஹிர் மௌலானா அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்தபோது அவரையும் கட்சியிலிருந்து நீக்கி விட்டார், ஆக இவரது பிரச்சினை இந்த முஸ்லிம் சமூகத்தைப் பற்றியதோ நாட்டைப் பற்றியதோ அல்ல. கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமைகள் அமைச்சுப் பதவிகளையும் அதிகாரங்களையும் பெறக்கூடாது என்பதேயாகும். இப்படிப்பட்ட குறுகிய நோக்கமுள்ள ஒருவர் இந்த சமூகத்தின் தலைவராக எப்படி இருக்க முடியும்? எப்படி சமூகம் சார்ந்த தீர்மானங்களை எடுக்க முடியும்? தூரநோக்கற்ற, சமூகத்தைப் பற்றிச் சிந்திக்காத, சாணக்கியமற்ற தலைவர்தான் இந்த றவூப் ஹக்கீம். சாணக்கியமற்ற தலைவன் ஹக்கீமின் தீர்மானங்களை முஸ்லிம் சமூகம் நம்பி ஏமரார்ந்து விடக் கூடாது.

அஷ்ரப் அவர்கள் மறைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக றவூப் ஹக்கீம் பொறுப்பெடுத்துக் கொண்டதிலிருந்து இன்றுவரை உள்ள காலகட்டம் வரை இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் றவூப் ஹக்கீம் ஆதரவளித்த அணி படுதோல்வியைத்தான் சந்தித்து வந்திருக்கின்றது.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நின்று ஹக்கீம் பிரச்சாரம் செய்த வேளையில் மஹிந்த ராஜபக்ஷவே வெற்றி பெற்றார்.

2009ஆம் ஆண்டு யுத்தத்தை வென்றெடுத்து சிங்கள மக்களின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ போற்றப்படுகின்ற வேளையிலே முஸ்லிம் சமூகத்துக்கு உபத்திரவம் செய்த சரத் பொன்சேகாவை அறிமுகப்படுத்தி சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து பிரச்சாரம் செய்த றவூப் ஹக்கீம் அதிலும் தோற்றார். எனவே, அவரது தலைமையின் கீழ் அவர் எடுத்த எல்லா முடிவுகளும் இந்த சமூகத்தை நிர்க்கதியாக்கியதாகத்தான் அமைந்தது என்பதை முஸ்லிம் சமூகம் வரலாற்றுப் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். என்றார்.

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு மயக்கமருந்து இயந்திரம் வழங்கி வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



நிந்தவூர் ஆதார வைதியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அத்தியாவசியத் தேவையாகக் காணப்பட்ட மயக்க மருந்து இயந்திரம் (Anesthesia Machine) மற்றும் மகப்பேற்று விடுதிக்குரிய Cardiotocography (CTG) இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கருஈஎ வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 10 மில்லியன் ரூபா நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட குறித்த மருத்துவ உபகரணங்களை கையளிக்கும் அண்மையில் (09) நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டொக்டர் எம்.எஸ்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## தமிழ் பொது வேட்பாளர்; வடக்கு, கிழக்கு மக்கள்

ஒரு நிர்பந்தத்தின் பெயரில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களித்தோம். நாம் தமிழர்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என இங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் இனத்தின் பிரச்சினை தீர்ப்பதற்காக எந்தவொரு ஜனாதிபதியும் இதுவரையில் முயற்சி எடுக்கவில்லை.

இந்தத் தேர்தலிலிருந்து தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் நினைத்ததை சாதிப்பார்கள். என வாக்காளர் ஒருவர் கூறினார். பல வருடங்களாக நாம் எமது உரிமைகளுக்காக போராடி வருகின்றோம். ஒருவரும் அதற்காக முன்வரவில்லை. எனவே எங்கள் பிரச்சினைகளுக்காக நாங்கள்தான் போராட வேண்டும்.

தமிழ் மக்கள் எதற்கும் சளைத்தவர்கள் இல்லை. நாம் ஒற்றுமையாக இருந்து எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி உரிமைக்காக போராட வேண்டும் என மற்றுமொரு வாக்காளர் தமது கருத்தை பகிர்ந்துக்கொண்டார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## சஜித்துடன் கலந்துரையாடி அறிவிப்பேன்

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் இன்றைய கூட்டம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

14 ஆம் திகதி நடைபெற இருந்த மத்திய செயற்குழு கூட்டம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததன் காரணமாக மீண்டும் மத்திய செயற்குழுவை கூட்ட வேண்டிய தேவை இல்லை என்பதினால் அது இரத்த செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் பின்னர் கூடலாம். தற்போது அதற்கான தேவை இல்லை என்பதன் அடிப்படையிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு என தெரிவித்ததன் அடிப்படையில் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை விடயம், புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான விடயம் உட்பட பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறை தொடர்பாக சஜித்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது என முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த கால வரையறைகள் தொடர்பாக சஜித் பிரேமதாசாவுடன் நான் கலந்துரையாடியதன் பின்னர் அதில் எட்டப்பட்ட தீர்மானங்களை இந்த விசேட குழுவிற்கு அறிவிப்பது எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## விஞ்ஞாபனங்களை அலசி ஆராய்ந்து முடிவை அறிவிப்போம்

வெளியிடும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் இத்தீர்மானம் குறித்து கட்சியின் உறுப்பினர்கள் சிலர் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுவருகின்றனர்.

இத்தகைய குழறுபடிகளுக்கு மத்தியில் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வேட்பாளர்கள் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து, அவற்றின் உள்ளடக்கங்களின் அடிப்படையில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதெனத் தீர்மானிக்கும் நோக்கில் தமிழரசுக்கட்சியினால் கடந்த மாதம் நிறுவப்பட்ட விசேட குழு நேற்று செவ்வாய்கிழமை வவுனியாவில் கூடியது. தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், சி.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் உள்ளடங்கும் குழுவில், சரவணபவன் தவிர்ந்த ஏனைய ஐவரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறிதரன், கடந்த முதலாம் திகதி கட்சியின் மத்திய குழு கூடிய வேளையில் ஜனாதிபதி வேட்பாளர்களின் சிலரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை எனவும், தற்போது அவை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அவற்றையும் நன்கு ஆராய்ந்ததன் பின்னர் யாருக்கு ஆதரவளிப்பது என்பது பற்றி இறுதித்தீர்மானம் ஒன்றை எதிர்வரும் 14 அல்லது 15 ஆம் திகதி வெளியிடுவதற்கு உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அதேபோன்று எதிர்வரும் 14 ஆம் திகதி கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெறவிருந்த நிலையில், அதுகுறித்த தீர்மானத்தையும் இக்குழு மீண்டும் கூடி ஆராய்ந்து மேற்கொள்ளும் எனவும், அதற்கு முன்பதாக தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து உரியவாறான அறிக்கையொன்றை வெளியிடும் எனவும் சிறிதரன் குறிப்பிட்டார்.

## பொருத்தமான அறிக்கையை வெளியிடுவோம்

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்ன அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதற்காக எங்களுடைய கட்சி ரீதியான கொள்கை, எங்களுடைய இனப்பிரச்சினை தீர்வு, சமஷ்டி, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்மானங்கள், அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளராக உள்ள சஜித் பிரேமதாசாவின் கருத்துக்கள் தேர்தல் அறிக்கை விடயங்களையும் நாங்கள் கருத்தில் கொண்டு, அதில் எங்களுக்கும் அவருக்கும் இணக்கம் ஏற்படக்கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி நாங்கள் எதிர்வரும் 14 அல்லது 15ஆம் திகதிக்கு முன்னதாக எங்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை பொதுமக்களுக்காக வெளியிடவுள்ளோம்.

இந்த தேர்தல் தொடர்பில் கொள்கை அடிப்படையிலும் இனத்தின் விடுதலையை அடிப்படையாகவும் அதேவேளை சஜித் பிரேமதாசாவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் சார்பாகவும் அது தொடர்பில் எங்களுடைய கருத்துக்கள் என்ன என்பது தொடர்பிலும் அந்த அறிக்கையை நாங்கள் வெளியிட இருக்கின்றோம்.

ஆகவே இந்த ஐவர் அடங்கிய குழு மீண்டும் கூடி அந்த அறிக்கையை பத்திரிகையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் வெளியிடுவோம்.

ஒரு தமிழினத்தின் அரசியல் தலைவர் என்ற ரீதியிலும் ஒரு பிரதான கட்சியினுடைய தலைவர் என்ற ரீதியிலும் உங்களுடைய கட்சி சஜித் பிரேமதாசாவை தெரிவு செய்திருக்கின்ற நிலையில் நீங்கள் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும் என்று கூறுகின்றமை தமிழ் மக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை சொல்வதாக இருக்காதா என ஊடகவியலாளர் கேட்டபோது, நான் ஒருபோதும் மாறுபட்ட கருத்துக்களை கூறவில்லை. நான் ஆரம்பத்தில் நான் கட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர்களது தீர்மானத்திற்கான விளக்கம் எனக்கு என்ன என்று தேவைப்பட்டிருந்தது. ஆகவே அந்த நேரத்தில் சொன்ன கருத்து கட்சி எடுத்த தீர்மானத்தை நாங்கள் ஆராய்ந்து எவ்வாறு மக்கள் மத்தியில் முன்வைப்பது என்பது பற்றி தான் நான் சொல்லியிருந்தேன். வேறு ஒரு விதமான கருத்தை நான் சொல்லவில்லை. பத்திரிகைகள் ஒரு தலைப்புச் செய்தியை கண்டுபிடித்து வெளியிட்டதை நான் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுவதாக பரப்புவது பிழையானது.

ஆகவே கட்சியினுடைய கூட்டத்தில் நான் பங்கு பற்ற முடியாத நிலையில் வெளியிட்ட கருத்தை கட்சியுடன் பேசுவதற்கு நாங்கள் இன்றும் மூன்றாவது முறையாக கலந்துரையாடி இருக்கின்றோம்.

ஆகவே நாங்கள் இறுதி முடிவை எப்போது எடுப்போம் என்பது தான் முக்கியமானது. ஆகவே கட்சி எடுத்த தீர்மானத்திலும் இன்று நாங்கள் என்ன திருத்தங்களை மாற்றங்களை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் பேசியிருக்கிறோம். அதற்கு பொருத்தமான ஒரு அறிக்கை நாங்கள் வெளியிடுவோம்.

ஆகவே கட்சியினுடைய பயணம், மக்களுடைய பலம், ஜனநாயக ரீதியாக வாக்களிக்கின்ற போது நாங்கள் தேவைப்பட்ட திருத்தங்களை செய்து இறுதியாக ஒரு அறிக்கையை தயாரித்து வெளியிடுவது எங்களுடைய தேர்தல் சம்பந்தமான அறிக்கையாக இருக்கும். கட்சியின் தலைவர் என்ற ரீதியில் இன்றும் நாங்கள் அந்த அறிக்கையை தயாரிப்பதற்கு நியமித்த குழுவோடு பேசி வெளியிடுவதற்கு கலந்துரையாடுகிறோம்.

ஆகவே உங்களுடைய நிலைப்பாடு மாற்றம் அடைவதற்கு வாய்ப்பு உள்ளதா என கேட்டபோது,

அது தொடர்பில் தற்போது கூறுவதற்கு தயார் இல்லை. நாம் இன்று பேசியதற்கு தொடர்ச்சியாக அடுத்த கூட்டத்திலும் கலந்துரையாடுவோம் என தெரிவித்தார்.

## சஜித்திற்கு ஆதரவு உறுதி

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த்தேசிய பொதுக்கட்டமைப்பினால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் தாம் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிக்கப்போவதில்லை எனவும், மாறாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்த உத்தரவாதத்தை வழங்கக்கூடிய ஏனைய பிரதான வேட்பாளர்களில் ஒருவரையே ஆதரிப்போம் எனவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார். ஆனால் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து கட்சி ரீதியாகத் தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்பதாக கடந்த மாத இறுதியில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை நேரில் சந்தித்த தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், அவருக்குத் தனது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இம்மாதம் முதலாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அத்தீர்மானம் குறித்து கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளாத தலைவர் மாவை சேனாதிராஜா எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அதற்கு மறுதினம் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் தமிழரசுக்கட்சி எடுத்திருக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம் என அறிவித்தார்.

அதேவேளை மத்திய குழுக்கூட்டம் நடைபெற்ற தினத்தன்று லண்டனில் இருந்த சிறிதரன், சமஷ்டி தீர்வு குறித்து சஜித் பிரேமதாஸ வழங்கிய உத்தரவாதம் என்னவென்று கேள்வி எழுப்பியதுடன், இம்முறை தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவளிப்பதற்குத் தான் மேற்கொண்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய குழறுபடிகளுக்கு மத்தியில் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வேட்பாளர்கள் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து, அவற்றின் உள்ளடக்கங்களின் அடிப்படையில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதெனத் தீர்மானிக்கும் நோக்கில் தமிழரசுக்கட்சியினால் கடந்த மாதம் நிறுவப்பட்ட விசேட குழு செவ்வாய்க்கிழமை (10) வவுனியாவில் கூடியது.

தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், சி.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் உள்ளடங்கும் குழுவில், சரவணபவன் தவிர்ந்த ஏனைய ஐவரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதென மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், ஆகவே அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அவருடன் கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார். அத்தோடு எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதால், எதிர்வரும் 14 ஆம் திகதி கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை நடத்தாமல் இருப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் கூட்டத்தில் கலந்துகொண்ட சிறிதரன், அவரது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகவே முன்னெடுக்கவிருப்பதாகத் தெரிவித்ததாகவும், ஆனால் அது அவருடைய விருப்பம் எனும்போதிலும், கட்சி அதற்கு அனுமதி அளிக்காது எனத் தாம் கூறியதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

அதேபோன்று இதுபற்றிக் கருத்து வெளியிட்ட மாவை சேனாதிராஜா, இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து கட்சியினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு இசைவாக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களிக்கவேண்டும் என வலியுறுத்தி விரிவான அறிக்கையொன்றை எதிர்வரும் 14 அல்லது 15 ஆம் திகதி வெளியிடுவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும், அதற்கு சிறிதரன் உள்ளடங்கலாக சகலரும் இணங்கியதாகவும் கூறினார்.

# ஊழலை நிறுத்த, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கண்டறிய, போதைப்பொருள் விநியோகத்தை ஒழிக்க முறையான வேலைத்திட்டம்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பங்காளர்களாக ராணுவத்தினரை இணைத்து இந்த நாட்டை ஊழலில் இருந்து மீட்டெடுக்கின்ற பயணத்தின் முன்னோடிகளாக நியமித்துக் கொள்வோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பநிலையையும் இந்த தீவிரவாத தாக்குதலுக்கு முன்னுரிமை வழங்கிய குழுவையும், அதன் பிரதான சூத்திரதாரியையும் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை பாரபட்சமின்றி முன்னெடுப்போம். எமது நாட்டின் கொடிய நோயாக மாறி இருக்கின்ற போதைப்பொருள் விநியோகத்தை முற்றாக ஒழிப்பதற்கு ராணுவத்தினரின் பூரண பங்களிப்பையும் பெற்றுக் கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் இராணுவ சக்தி (10) ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை பாதுகாப்பதற்கும், நாட்டை ஒருமைப்படுத்துவதற்கும் தொடர்ந்து உயிரை துச்சமாக மதித்து தமது கடமைகளை முன்னெடுக்கின்ற முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு படையினர், உள்ளிட்ட ராணுவத்தினரை அரசியல் காலங்களில் அரசியல் கால்பந்துகளாக நடத்தப்படுகின்றனர். தேர்தல் காலங்களில் பல சந்தர்ப்பங்களில் அனாதைகளாக கைவிடப்படுகின்றனர். பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் முப்படையினரும் பொலிசஸார், பாதுகாப்பு பிரிவில் உள்ளவர்களினதும் உரிமைகள் குறித்து குரல் எழுப்பியதோடு உரிமைகளை பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி செயற்பட்டிருக்கின்றது.

ராணுவத்தினருக்கான ஜனாதிபதி செயலணி.

அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவது எதிர்க்கட்சியின் செயற்பாடாக இருக்கின்றது. 21 ஆம் திகதிக்கு அந்த செயற்பாட்டிற்கு 220 இலட்சம் மக்களின் ஆசீர்வாதத்தோடு தீர்வினையும் பதிலையும் வழங்குகின்ற காலம் ஆரம்பமாகும். 48 மணித்தியாலத்திற்குள் முப்படையினரும் பொலிஸார், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்குவோம். அதன் ஊடாக குறிப்பிட்ட காலத்துக்குள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ராணுவத்தினரின் நலன்புரி விடயங்களுக்கு புதிய வேலை திட்டங்கள்.

வன் ரேங்க் வன் பென்ஷன் வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

ராணுவத்தினரின் நலன்புரி செயற்பாடுகளுக்காக உள்ள இராணுவ அதிகார சபைக்கான சட்ட ரீதியான அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. எனவே ராணுவத்தினருக்காக தனியான திணைக்களம் ஒன்றும் உருவாக்கப்படும். இவர்களுக்கு சமூகத்தில் மேலும் வருமானத்தை பெறக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கி, வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும், தொழில் முனைவோர்களாக மாறுவதற்கும் தேவையான ஆரம்ப மூலதனத்தையும் வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கணிப்பிட முடியாத அளவு உயிரை பணயம் வைத்து தொடர்ந்து செயல்பாடுகளை முன்னெடுக்கின்ற முப்படையினர், சிவில் பாதுகாப்பு துறையினர் மற்றும் பொலிஸார் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் குறித்து கண்டறிந்துள்ளோம். அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க வழி அமைத்துள்ளோம். இராணுவ கட்டமைப்புக்குள் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றையும் நிவர்த்தி செய்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

அக்ரஹார காப்புறுதி திட்டத்தையும் ஓய்வூதியத்தையும் முறையாக வழங்குவோம். நிலையான வைப்பிற்கான 15 வீத வட்டியை வழங்குவதோடு அதனை அதே நிலையில் செயற்படுத்துவோம். அங்கவீனமடைந்த ராணுவத்தினரின் நலன்புரி விடயங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். கண், கை, கால் உள்ளிட்ட அவயவங்களை இழந்து இரத்தம் சிந்தி, எம்மை பாதுகாத்த ராணுவத்தினர் எம்மால் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் நாம் பெற்றுக் கொடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன மத பேதங்கள் பாராது நாம் ஒன்றிணைவோம்.

அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ராணுவ குடும்பங்களின் பிள்ளைகளுக்கும், வடகிழக்கில் உள்ள தமிழ் குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் தனியான வேலை திட்டங்களை உருவாக்குவோம். யுத்தத்திற்கு பின்னர் இன மத பேதங்களின்றி அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து இந்தப் பொறுப்புக்களை செயல்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் பொது வேட்பாளருக்கே ஆதரவு:
# தமிழரசு கட்சியின் கிளிநொச்சி கிளை ஏகமனதாக தீர்மானம்

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில், அந்தக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவு வழங்குவதாக ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

தமிழரசு கட்சியின் கிளிநொச்சி கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய நியமிக்கப்பட்ட குழு கூடாமலே கட்சியின் ஆதரவு அறிவிக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி கூடிய மத்திய



குழு, ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து யாருக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான குழு நியமிக்கப்பட்டது.

எனினும், இந்த குழுவின் அறிவிப்பு எதுவும் வெளியாகாமல் கடந்த முதலாம் திகதி மத்திய குழு கூடி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தவறான ஒன்றாகும். என தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நேற்றைய கலந்துரையாடலில் கூடியிருந்த அனைவரும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக ஏக மனதாக தீர்மானம் எடுத்திருக்கிறார்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய நியமிக்கப்பட்ட சிறப்பு குழு இன்று வவுனியாவில் கூடவுள்ளது.

மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழர கட்சியின் செய்லாளர் பா.சத்தியலிங்கம் உள்ளிட்டவர்கள் இன்று சந்தித்து பேசுவுள்ளனர்.

இன்று எடுக்கப்படும் தீர்மானம், எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள மத்திய குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டும் என தமிழரசு கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சங்கே தமிழர்களின் அடையாளம்
## சிங்களவர்களையும் வாக்களிக்குமாறு கோரிக்கை

சிங்கள மக்கள் கூட தமது முதல் வாக்கினை தமிழ் பொது வேட்பாளருக்கு அளித்த பின்னர் ஏனைய இரு விருப்பு வாக்குகளையும் தாம் விரும்புபவருக்கு அளிக்கலாம் என அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழ் பொது வேட்பாளர் தான் தமிழ் மக்களுக்கு தேவை, சங்கே தமிழர்களின் அடையாளம். அதனால் அனைத்து தமிழ் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழ் மக்களின் குரலை வலுப்படுத்த வேண்டும் முஸ்லிம் மக்களும் மதங்களை தாண்டி தமது முதல் வாக்கினை தமிழ் பொது வேட்பாளருக்கு அளிக்க வேண்டும்.

அதேபோன்று மலையகம் மற்றும் தெற்கு உள்ளிட்ட இலங்கையின் ஏனைய பகுதிகளில்



வாழும் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

குறிப்பாக சிங்கள மக்கள் கூட தமது முதல் வாக்கினை தமிழ் பொது வேட்பாளருக்கு அளித்த பின்னர் ஏனைய இரு விருப்பு வாக்குகளையும் தாம் விரும்புபவருக்கு அளிக்கலாம் என மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருட்கள் கட்டுப்பாடு:
# வேட்பாளர்களின் விஞ்ஞாபனம் கூறுவது என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மதுபானம், புகையிலை மற்றும் பிற போதைப் பொருட்கள் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் அவதானம் செலுத்தியுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி மதுபானம், புகையிலை , சிகரெட் மற்றும் போதைப்பொருட்களை கட்டுபடுத்துவதற்கான 12 யோசனைகளை குறித்த நிறுவனம் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைத்திருந்தது.

அதன்படி, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாகியுள்ள வேட்பாளர்களுள் பிரதான வேட்பாளர்கள் 2024 செப்ரம்பர் மாதம் 6ஆம் திகதி வரையில் வெளியிட்டுள்ள விஞ்ஞாபனத்தினுள், மதுபானம், புகையிலை, சிகரெட் மற்றும் பிற போதைப்பொருட்கள் கட்டுப்பாடு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த வேட்பாளர்களின் விஞ்ஞாபனத்தினுள் மதுபானம், புகையிலை, சிகரெட் மற்றும் பிற போதைப் பொருட்கள் கட்டுப்பாடுக்கான முன்மொழிவுகளின் பகுப்பாய்வை கீழே காணப்படும் அட்டவணை காட்டுகிறது.

மேலே காட்டப்பட்டுள்ள அவதானிப்பில், ஜனாதிபதி வேட்பாளர்கள் மதுபானம், புகையிலை மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகளை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்கியிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைய முடியாது.

எனினும், சில வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களில் முன்வைக்கப்பட்ட சாதகமான முன்மொழிவுகள் பாராட்டத்தக்கவை.

மது, புகையிலை மற்றும் பிற போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவது மக்களின் ஆரோக்கியம், பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தலில் கலந்து கொண்டவர்கள் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் என்ற வகையில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் உள்ளடக்கியிருப்பார்கள், மதுவைக் கட்டுப்படுத்துவதற்காக வழங்கிய ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என நம்புகிறோம்.

புகையிலை, சிகரெட் மற்றும் பிற போதைப்பொருட்கள் மற்றும் மதுபானம், சிகரெட் மற்றும் பிற போதைப்பொருட்களின் பயன்பாட்டை உடனடியாக குறைக்கும். என மேற்கோள்காட்டப்பட்டுள்ளது.

## சந்திரிக்காவின் வாக்கு யாருக்கு?
# அவரே கூறிய பதில்

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குதல் மற்றும் ஜனநாயக முறைமையை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுமாறு, தேர்வான ஜனாதிபதியிடம் மக்கள் வலியுறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்க தீர்மானித்துள்ள சந்திரிக்கா, தனது வாக்குரிமையை பயன்படுத்துவதாகவும் ஆனால் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட எவருக்கும் முக்கிய பொறுப்பும் கடமையும் உண்டு. அனைத்து வேட்பாளர்களும் சிறந்த கொள்கை அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் அதை எவ்வாறு செயற்படுத்துவார்கள் என்பதற்காக காத்திருக்கின்றேன்.

இந்த முன்மொழிவுகளை திருடர்கள்



குழுவுடன் செயற்படுத்த முடியாது. மேடையில் உள்ள வேட்பாளர்களில் பலர் திருடர்கள் என்று நிருபிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள். இவ்வாறானவர்களைக் கொண்டு எப்படி அரசாங்கத்தை நடத்தப் போகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் கல்வித்துறை போன்றவற்றில், புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

# காரைதீவில் ‘நமக்காக நாம்’ தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு பெரு வரவேற்பு






**( வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவில் ‘நமக்காக நாம்’ ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு (10) செவ்வாய்க்கிழமை பகல் பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

வரவேற்றபின்னர் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திருமதி சின்னையா ஜெயராணி உள்ளிட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது வரவேற்பாளர்களும் வரவேற்றனர்.

‘நமக்காக நாம்’ தமிழ் பொது வேட்பாளருக்காக கிராமங்கள் தோறும் நடைபெறுகின்ற தேர்தல் பரப்புரை செயற்பாட்டிலே நேற்று தமிழ் பொது வேட்பாளர் அறியநேத்திரன் கலந்து கொண்டார்.

அவருடன் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர். தமிழ் மக்கள் பொதுச்சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் சமூக நலன் விரும்பிகள், சமூக நல அமைப்புகளும் கைகோர்த்துக்கொண்டனர்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பேரெழுச்சியை உலகறிய செய்வது இதன் நோக்கமாகும்.

பெரிய நீலாவணையில் ஆரம்பித்த பொது வேட்பாளருக்கான வரவேற்பு கல்முனை காரைதீவு நாவிதன்வெளி அக்கரைப்பற்று திருக்கோவில் பொத்துவில் வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


## வெருகலம் பதிக்கு வேல் நடைபஜனை ஆரம்பம்.!





வரலாற்றுச் சிறப்பு மிக்க வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மூதூர், தங்கபுரம் விநாயகர் ஆலயத்தில் இருந்து வேல் நடைபஜனை செவ்வாய்க்கிழமை (10) ஆரம்பம் ஆன போது . **(அ . அச்சுதன்)**

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தீயில் எரிந்த வாகனம்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவை இடமாறும் பகுதியில் வாகனமொன்று செவ்வாய்க்கிழமை (10) காலை தீப்பிடித்துள்ளது.

இதனால் குறித்த பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தீயை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை தீயணைப்பு வீரர்கள் அணைத்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இரண்டு பொறியியலாளர்கள் பயணித்த கெப் வண்டியொன்று (10) காலை தெற்கு அதிவேக வீதியின் கொட்டாவை பகுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீயினால் கெப் வாகனம் தீக்கிரையாகியுள்ளதாக அத்துருகிரிய அதிவேக நெடுஞ்சாலை கட்டுப்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் கெப் வண்டியில் பயணித்தவர்களுக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

கொழும்பு பிரதேசத்தில் உள்ள நிறுவனமொன்றின் பொறியியலாளர்கள் இருவர் காலி பிரதேசத்தில் வர்த்தகர்களுக்கான பயிற்சி பட்டறை ஒன்றை நடத்துவதற்காக சென்று கொண்டிருந்த போது, இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இரண்டு பொறியாளர்கள் மற்றும் சாரதியும் கெப் வாகனத்தை விட்டு வெளியே வந்தவுடன் வாகனத்தின் முன்பக்கத்தில் இருந்து புகை வந்து தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதையடுத்து உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு தீயை அணைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் சுமார் 75 % தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தீ விபத்து காரணமாக கடுவெலயிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற வாகனங்கள் சுமார் 15 நிமிடம் நிறுத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். அத்துருகிரிய அதிவேக வீதியின் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

## அரியநேத்திரனுக்கு அம்பாறையில் பெரு வரவேற்பு



**( வி.ரி. சகாதேவராஜா)**

ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு ( 10) செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருடன் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா நடராஜா உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.

முதலில் அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள பெரிய நீலாவணையில் அவருக்கு பெரிய வரவேற்பளிக்கப்பட்டது.

தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கை தமிழரசுக்கட்சி கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பொன்னாடை போர்த்தி வரவேற்றார் .

ஏனைய தாயக செயலணி உறுப்பினர்கள் பொது கட்டமைப்பு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். அங்கே முருகன் கோயிலில் சிறப்பு பூஜை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து கல்முனை காரைதீவு அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலும் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

## தேசிய மட்ட சாதனையாளர்களை வரவேற்கும் நிகழ்வு



**(எம்.ஏ.றமீஸ்)**

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டி வரவேற்கும் நிகழ்வு (09) பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது தேசிய மட்ட சாதனை மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.செய்னுதீன், பிரதி அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் போன்றோர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகள் கடந்த சனி ஞாயிறு(07,08) ஆகிய தினங்களில் கொழும்பு சாஹிறா கல்லூரியில் இடம்பெற்றன. இப்போட்டிகளின் போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்கள் நான்கு போட்டிப் பிரிவுகளில் கலந்து கொண்டு நான்கு போட்டிகளிலும் முதலாமிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான ஹஸீதா, ரபான் நடனம் ஆகிய இரு குழுப் போட்டி நிகழ்ச்சிகளிலும், அறபு எழுத்தணி, அறபுத் தமிழ் இலக்கியம் ஆகிய இரு தனி நிகழ்ச்சிகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, கல்லூரியின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோருக்கு தமது நன்றியினையும் தெரிவிப்பதாக அதிபர் ஏ.எச்.பௌஸ் இதன்போது தெரிவித்தார்.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 ரூபா அடிப்படை சம்பளம்

பெருதோட்டத் தொழிலாளர்களுக்கு முதல் 1350 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்க கம்பனிகள் இணங்கியுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும்,கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இன்று முதல் கட்டாயமாக 1350 ரூபாய் அடிப்படை சம்பளம் வங்கப்பட்டுள்ளது. அதை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

முதல் கட்டமாக இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளமாக 1350 ரூபாய் வழங்கப்படும். மிகுதி 350 ரூபா பேச்சுவார்த்தைகளின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும். என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சம்பளத்தை பெற்றுக்கொடுக்க ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

## ‘எமது காலம்’ என்ற தொணிப் பொருளில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம்











(வாஸ் கூஞ்ஞ)

நமக்கு அருகாமையிலுள்ள பண்டைக் கால விடயங்களும் நாம் நாளாந்தம் அனுபவித்து வரும் பொருட்கள் தொடர்பாகவும் சாதாரண மக்களுக்கு வரலாறு தெரியாது இருந்து வருவதை அருங்காட்சி மூலம் அறிந்து கொள்ளும் நோக்குடனே 'எமது காலம்' என்ற தொணிப் பொருளில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் நடாத்தப்படுகின்றது என மன்னார் மாவட்ட சர்வோதய இயக்குனர் திருமதி சசிரேக்கா நகுலேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னாரில் செப்படம்பர் 4ந் திகதி முதல் 11ந் திகதி வரை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

‘சேச் வோ கொமன் கிறவ்ன்ட்’ என்ற நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மாவட்ட சர்வோதயத்தின் அனுசரணையுடன் இந் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இதில் பழமை வாய்ந்த கண்காட்சிகளுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள முக்கியமான விடயங்களும் இவ் அருங்காட்சியத்தில் காணப்படுகின்றது.

இவ் அரங்காட்சியை நடாத்துவதன் நோக்கம் நமக்கு அருகாமையிலுள்ள பண்டைக்கால விடயங்களும் நாம் நாளாந்தம் அனுபவித்து வரும் பொருட்கள் தொடர்பாகவும் சாதாரண மக்களுக்கு வரலாறு தெரியாது இருந்து வருகின்றது. எமது மக்களின் கடந்த காலத்தின் வரலாற்றை நோக்கும் முகமாகவும் இலங்கையின் 70 வருட வரலாற்றை அனுபவிக்கும் ஒரு தருணமாக இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் யாவரும் இதை கண்டு களிப்பது மட்டுமல்ல யாவற்றையும் நன்கு அறிந்து செல்லும் நிலையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒரு உதாரணமாக தெரிவிக்கும்போது கடித உறைக்கு முத்திரையை ஒட்டி அனுப்புகின்றோம். ஆனால் அந்த முத்திரையைப் பற்றி தெரியாது பலர் காணப்படுகின்றனர்.

அந்த முத்திரைகளில் எவ்வளவு வகையான விதங்கள் இருக்கின்றது அந்த முத்திரைகள் ஊடாக என்ன சொல்லப்படுகின்றது எத்தனை வகையான முத்திரைகள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது போன்ற செய்திகளை இந்த அருங்காட்சி ஊடாக யாவரும் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடாகவே இது காணப்படுகின்றது.

இந்த அருங்காட்சியானது நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ள யாவற்றுக்கும் அதற்கான விளக்கங்களும் தெளிவுகளும் கண்டு கழித்து செல்வோருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் எமது வரலாறுகளையும் இங்கு பதிவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒரு சிறிய பொருளுக்கும் வரலாறு இருக்கின்றது என இங்கு உணர்த்தப்படுகின்றது என மன்னார் மாவட்ட சர்வோதய இயக்குனர் திருமதி சசிரேக்கா நகுலேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

## முச்சக்கரவண்டியிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு



தலவாக்கலை பி.கேதீஸ்

தலவாக்கலை லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தின் கிளனிகல்ஸ் பிரிவிலுள்ள வீடொன்றிற்கு அருகாமையில் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின் ஆசனத்தில் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

சிசுவின் சடலம் துணியால் மூடப்பட்டு முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் திங்கட்கிழமை (09) இரவு முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் இதனைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சிசு பிறந்து சில நாட்களே இருக்கலாம் என சந்தேகிக்கின்றனர். சிசுவின் சடலத்தை கொண்டு வந்து முச்சக்கரவண்டியின் பின் ஆசனத்தில் வைத்த நபர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை எனவும் நுவரெலியா மாவட்ட நீதவான் நேற்று (10) சம்பவ இடத்திற்கு வந்து பரிசோதனையை மேற்கொண்டதன் பின்னர் சடலத்தை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனை ஸாஹிரா கல்லூரி வரலாற்று சாதனை வெற்றி



(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சினால் முதன் முதலாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட இஸ்லாமிய கலாச்சாரப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் (07,08/09/2024) கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடைபெற்றது. வலய மட்டம், மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற கல்முனை ஸாஹிராகல்லூரி கலிகம்பு கலை அணியினர் அகில இலங்கை தேசிய மட்ட போட்டியிலும் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்று ண்ச்ச்தனையை புரிந்துள்ளனர்.

இவ் வரலாற்று வெற்றியை பெற்றுத் தந்த மாணவர்களுக்கும் மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச்சென்ற கல்லூரியின் விளையாட்டுதுறை பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம்.அமீர் , எம்.வை. எம்.றகீப் அவர்களுக்கும் பயிற்சி வழங்கிய எம்.பைஸர் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, இவ் வெற்றிக்காக உறுதுணையாய் இருந்த மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து ஆலோசனை, வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் அவர்களுக்கும் மற்றும் பிரதி, உதவி அதிபர்கள், போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற்கொண்ட பாடசாலை நிர்வாகம், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் பழைய மாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இலவச முன்னோடி பரீட்சை வினாப்பத்திரம் வழங்கும் நிகழ்வு







(அ.அச்சுதன்)

நீர்கொழும்பு ஓரியன்ட் லயன்ஸ் கழகத்தின் தலைவர் தேசமான்ய கலாநிதி ஹிரான் பீட்டரின் வழிகாட்டலுக்கமைய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடி பரீட்சை வினாப்பத்திரம் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நீர்கொழும்பு கல்வி வலயத்திற்குட்பட்ட 99 பாடசாலைகளை சேர்ந்த 6980 மாணவர்கள் பயனடையவுள்ளனர். தரம் வாய்ந்த ஆசிரியர்களின் உதவியுடன் எதிர்பார்க்கை வினாக்கள் மற்றும் நுட்பங்களை கொண்டதாக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு ஓரியன்ட் லயன்ஸ் கழகத்தின் சமூக நல செயற்பாட்டின் ஓர் அங்கமாக இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலவசமாக முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டத்தினால் பல பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் பயனடைவார்கள் என்றும் இத்திட்டம் மாணவர் மைய கல்வியை விருத்தி செய்ய ஏதுவாக அமையுமென்றும் கலாநிதி ஹிரான் பீட்டர் தெரிவித்தார்.

## மகிந்த ராஜபக்சவை கோலை செய்ய முயற்சி: போதுஜன பேரமுன அச்சம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை படுகொலை செய்ய தேசிய மக்கள் சக்தி சதித்திட்டம் தீட்டுவதாக ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தமது அரசாங்கத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதிகளின் குடியிருப்புகளையும் பாதுகாப்பையும் பறித்து இவ்வாறு கொலை செய்ய சதித்திட்டம் தீட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவை ஆதரித்து இடம்பெற்ற பிரச்சார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அத்துடன், இதுகுறித்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு அக்கட்சியின்தலைவர் அனுரகுமாரதிஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601